திரு. நா. வெ. குருசாமி. பெரியாறு, தேக்கடி, வைகை அணை போன்ற முக்கியமான இடங்களுக்குச் செல்லுகின்ற மதுரை—குமிழி சாலை சரிவர இல்லை. வைகை அணைக்குச் செல்லவேண்டுமென்றாலே 40 மைல் செல்ல வேண்டும். அந்தச் சாலை அகலப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி யூனியன் சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது பற்றி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது ஏற்கனவே இருக்கும் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது பற்றி. தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் தரப்படும்.

பெரியாறு அபிவிருத்தித் திட்டம்

* 194 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் எத்தனை கோடி ரூபாயில் போடப்பட்டுள்ளது ?

(இ) எப்பொழுது அதன் வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் 1966-67-ஆம் ஆண்டில் ரூபாய் 4.25 கோடிக்கு மதிப்பிடப்பட்டது.

(இ) மத்திய நீர் மின் விசைக்குழுவின் ஒப்புதல் கிடைத்தபின் இத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

பச்சையாறு அணைத் திட்டம்

* 195 வினு— திரு. டி. கணபதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பச்சையாறு அணைத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதிப்பீடு பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் : நெல்லை மாவட்டத்திலே மிக வறண்ட பகுதி இந்த நாங்குநேரி பகுதி. எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லை. ஆகவே, உடனடியாக விவசாயத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் இப்போது தலைமைப் பொறியாளர் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையாக இருக்கிறது. தலைமைப் பொறியாளர் அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த பிறகு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றப்படும்.